**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**

**வடக்கு மாகாணம்**

**பெறுகைகளுக்கான அறிவித்தல் (2024/04)**

# Procurement for Supply of High Pressure Sterilizer – Single Door to the District General Hospital, Mullaithivu

1. தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் (பெரிது) மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவிற்கான High Pressure Sterilizer – Single Door இனை பெற்றுக்கொள்வதற்கு தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றது. தேவையான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| குறியீட்டு இலக்கம் | விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்பு | பெறுகைப் பாதுகாப்புப் பிணை (ரூபா) |
|---|---|---|---|---|
| NP/21/05/Me.Eq/DGHMU/2024 | High Pressure Sterilizer – Single Door | 01 | Rs.5,000.00 | Rs.350,000.00 |

2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

   a. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   b. அத்துடன் குறித்த பொருளையும் அத்துடன் இணைந்த சேவையினையும் வழங்குவதற்கான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் (தொடர்பு இல. 021 2220811, 021 2220812) எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை மேலே குறிக்கப்பட்ட முகவரியிலே வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை பரிசீலிக்க முடியும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கிலமொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வேலைநாட்களில் 26 யூலை 2024 ஆம் திகதி தொடக்கம் 15 ஆகஸ்ட் 2024 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப்பகுதியில் உரிய விண்ணப்பத்துடன் மேலே தெரிவிக்கப்பட்ட மீளளிக்கப்படாத வைப்புத் தொகையினை பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

6. பெறுகை ஆவணங்கள் 16 ஆகஸ்ட் 2024 ஆம் திகதி 10:30 மணிக்கு முன்பதாக தலைவர், திணைக்கள கேள்விச்சபை, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடமாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

7. பெறுகைக்கு முன்னரான கூட்டம் மாநாட்டு மண்டபம் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 02 ஆகஸ்ட் 2024 ஆம் திகதி காலை 10:00 மணிக்கு நடைபெறும்.

8. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உண்டு.

**வைத்திய நிபுணர்.V.P.S.D.பத்திரண**

**தலைவர்,திணைக்கள பெறுகைக் குழு (பெரிது)**

**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**

**சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்,**

**தொ.பே - 021-222-0811, 021-222-0812, 021-222-0839 தொலைநகல்: 021-222-0818, 021-221-7905 மின்னஞ்சல்:**

capdhsnp@gmail.com